மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவசாயக் கிடங்கு கட்டுவது என்றால் குறைந்த பட்சம் அதிலே வருஷத்திற்கு 50,000 ரூபாய் அளவுக்கு வரவு-செலவு ஆகவேண்டும் என்ற அளவுகோல் இருக்கிறது. அதனால்தான் இடையில் தடைப்பட்டு 28—2—1975 அன்று மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Cultivation of Jute

*732 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any study has been conducted on the cultivation of jute in non-paddy areas of Thanjavur district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: தஞ்சையில் பைலட் ஸ்கீமாக சணல் விளைவிப்பது பரிசீலிக்கப்பட்டதா? அதிலே என்ன முடிவு ஆயிற்று? அது சக்ஸஸ்புல்லா இல்லையா? இது மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய முறையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வினா ''நான்-பாடி ஏரியாவில் இது பரிசீலிக்கப்பட்டதா?'' என்பதாகும். நஞ்சை நிலங்களில் சில பகுதிகளில் இரண்டொரு இடங்களில் 1971, 1972, 1973 ஆகிய வருஷங்களில் பரீட்சித்துப் பார்த்ததில் ஜுட் பயிர் செய்வதை விவசாயிகள் விரும்பவில்லை என்று முடிவு செய்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் சணல் பயிரிடப்படுகிறது. அந்த விவசாயிகளை ஊக்குவிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வினா ஜுட் பற்றியது. அவர்கள் 'ஹெம்ப்' பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். ஹெம்ப் வேறு. ஜுட் வேறு. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், நாகப்பட்டினம், மன்னார்குடி, மாயூரம் ஆகிய பகுதிகளில் 10 சென்ட் அளவில் ஜுட் பயிர் செய்து பார்க்கப்பட்டது.

நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

*733 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?